

அமரர்

# திருமதி சந்திரமதி அமிர்தசிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவுமலர்

# சந்திர ஒளி

13.02.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"திருவாக்கும் செய் கருமம்"



அமரர்


# திருமதி சந்திரமதி அமிர்தசிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவுமலர்

# சந்திர ஒளி

**13.02.2020**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாத மலர் படையல்

எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

அன்பினை எமக்கென்றும் உணர்த்திநின்று
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க என
எம்மை ஏற்றி நிற்க
மனிதருள் மாணிக்கமாய்
எல்லோருக்கும் நல்லவராய்
அமைதியுடனும் ஆதரவுடனும்
எம்மைப் பேணி வளர்த்து
பண்புடனும் பாசத்துடனும்
வாழ்ந்து காட்டி
அன்புடன் அறவழியில் நாம் வாழ
இன்சொல் உரைத்து
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது அன்புத்தெய்வம்
திருமதி சந்திரமதி அமிர்தசிங்கம்
அவர்களின் பாதக்கமலங்களுக்கு
இம்மலரினை சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி!

**உளம் நெகிழ்ந்துருகும்**
**உங்கள்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# விநாயகர் வணக்கம்



திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

# தேவாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கம் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யாற்கழற்கென்
கைதான் தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்ற
தார் பெறு வாருலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்புர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடம்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளிளை மணம் புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமரந்த பெரு மாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவஸ்ஸீவஹ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்க்கோ தேவஸ்ய தீமஹி
தியோயோன ப்ரசோதயாத்."

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயர் துதி

புத்தியும் பலமும் தூய
புகழோடு துணிவும் நெஞ்சில்
பத்தியும் அச்ச மில்லாப்
பணிவும் நோய் இல்லா வாழ்வும்
உத்தம ஞானச் சொல்லின்
ஆற்றலும் இம்மை வாழ்வில்
அத்தனை பொருளும் சேரும்
அனுமனை நினைப்பவர்க்கே!

# ஸ்ரீ வைரவமூர்த்தி

நீல நிறங்கொண்ட திருமேனியும் செவ்விழியும்
நீண்டசெஞ் சடை மகுடமும்
கோலமிகு செவிதழுவு குண்டலமும் தலைமாலை
குலவுமார் புங் கைகளிற்
குலமுடுக் குப்பரசு பாசமும், தோன்றமெய்த்
துரியநட மாடுமரசே
ஞாலமெல் லாம் காக்கும் சிவசோதி வைரவ
நாதனே போற்றி போற்றி

# ஸ்ரீ சண்டேசுர்

கரவுறு தாதைதாளைக் கடிந்தனன் சிவனுளத்தான்
பரமனின் பூசையன்றிப் பயில்வேறு பூசை வேண்டா
தரனடி யார்கள்செய்த அருட்பூசைப் பயனைப்யாய்ந்து
தருபணி செயும் வைகுந்த சண்டேசுரர்தாள் போற்றி

பாடுகிற மந்திரமும் தொண்டும் வாழ்வும்
பலகலையும் பசுபதியும் பாதம் தோய்ந்து
தேடுகிற பேரின்பம் மோட்ச தீப
சிவசோதி மயமாகுந் திண்ணமாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநீற்றுப் பதிகம்

பாடல் - 1

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

பொருள்:

சிவந்த பவளம் போன்ற வாயினை உடைய உமைபங்கன் ஆகிய திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானது திருநீறு, மந்திரம் போல நினைப்பவரைக் காப்பது. வானவர் தம் மேனிமேல் பூசிக்கொள்ளப்படுவது. அழகு தருவது. எல்லா நூல்களாலும் புகழப்படுவது. ஆகமங்களில் புகழ்ந்து சொல்லப்படுவது. சிவமயத்தில் நிலைத்துள்ளது.

பாடல் - 2

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

பொருள்:

குளிர்ந்த நீர் நிரம்பிய வயல்கள் சூழ்ந்த திருஆலவாயிலில் விளங்கும் சிவபிரானது திருநீறு, வேதங்களில் புகழ்ந்து ஓதப்பெறுவது. கொடிய துயர்களைப் போக்குவது. சிவஞானத்தைத் தருவது. அறியாமை முதலியவற்றைப் போக்குவது. புகழ்ந்து போற்றத் தக்கது. உண்மையாக நிலைபெற்றிருப்பது.

பாடல் - 3

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.ஷ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்:

திருஆலவாயான் திருநீறு வீடுபேறு அளிப்பது. முனிவர்களால் அணியப் பெறுவது. நிலையாக எப்போதும் உள்ளது. தக்கோர்களால் புகழப்படுவது. இறைவனிடம் பக்தியை விளைப்பது. வாழ்த்த இனியது. எண்வகைச் சித்திகளையும் தரவல்லது.

பாடல் - 4

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

பொருள்:

திருஆலவாயான் திருநீறு கண்களுக்கு இனிமை தருவது. அழகைக் கொடுப்பது. விரும்பி அணிவார்க்குப் பெருமை கொடுப்பது. இறப்பைத் தடுப்பது. அறிவைத் தருவது. உயர்வு அளிப்பது.

பாடல் - 5

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.

பொருள்:

திருஆலவாயான் திருநீறு, பூசுதற்கு இனிமையானது. புண்ணியத்தை வளர்ப்பது. பேசுதற்கு இனியது. பெருந்தவம் செய்யும் முனிவர்கட்கு ஆசையை அறுப்பது. முடிவான பேரின்பநிலையை அளிப்பது. உலகோரால் புகழப்படுவது.

பாடல் - 6

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்:

அழகிய மாளிகைகள் சூழ்ந்த திருஆலவாயான் திருநீறு செல்வமாக இருப்பது. துன்பம் போக்குவது. மனவருத்தத்தைத் தணிப்பது. துறக்க இன்பத்தை அளிப்பது. எல்லோருக்கும் பொருத்தமாக இருப்பது. புண்ணியரால் பூசப்பெறுவது.

பாடல் - 7

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் திருவால வாயான் திருநீறே.

பொருள்:

கூர்மைக்கு விளக்கம் தருகின்ற சூலப்படையினை ஏந்திய திருஆலவாயான் திருநீறு, திரிபுரங்களை எரிக்கச் செய்தது. இம்மை மறுமை இன்பம் தர இருப்பது. பிறரோடு பழகும் பயன் அளிப்பது. செல்வமாக விளங்குவது. உறக்கநிலையைத் தடுப்பது. தூய்மையை அளிப்பது.

பாடல் - 8

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் றிருநீறே.

பொருள்:

பாம்புகள் வளைந்து தவழும் திருமேனியனாகிய திருஆலவாயான் திருநீறு., இராவணன் பூசிப் பயன் பெற்றது. நல்லவர்களால் எண்ணத்தக்கது. பராசக்தி வடிவமானது. பாவம் போக்குவது. தத்துவங்களாக இருப்பது. மெய்ப்பொருளை உணர்த்துவது.

பாடல் - 9

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் றிருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்:

நஞ்சுண்ட கண்டனாகிய திருஆலவாயான் திருநீறு, திருமால் பிரமர்களால் அறியப்பெறாத தன்மையை உடையது. வானுலகில் வாழும் தேவர்கள் தங்கள் மேனிகளில் பூசிக்கொள்வது. பிறவியாகிய இடரைத் தவிர்த்து நிலையான இன்பம் அளிப்பது.

பாடல் - 10

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் றிருநீறே.

பொருள்:

மேல் உலகில் வாழ்வோர் பணிந்து போற்றும் திருஆலவாயான் திருநீறு, குண்டிகை (கமண்டலத்தை) ஏந்திய கையர்களாகிய சமணர்கள் சாக்கியர்களின் கண்களைத் திகைக்கச் செய்வது. தியானிக்க இனியது. எட்டுத் திசைகளிலும் வாழும் மெய்ப்பொருளை அடைந்தவரும் ஏத்தப்பெறும் தகைமைப்பாடு உடையது.

பாடல் - 11

ஆற்ற லடல்விடை யேறு மால வாயான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

பொருள்:

ஆற்றலும், பிறரைக் கொல்லும் வலிமையும் உடைய விடையின்மீது ஏறிவரும் ஆலவாயான் திருநீற்றைப் போற்றிப் புகலியில் விளங்கும் பூசுரனாகிய ஞானசம்பந்தன் சைவத்தின் பெருமையைத் தெளிவித்துப் பாண்டியன் உடலில் பற்றிய தீமை விளைத்த பிணி தீருமாறு சாற்றிய இப்பதிகப்பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர் நல்லவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு பதிகம்

திருஞானசம்பந்தர், தமிழ்நாட்டில், சைவ சமயத்தவர்களால் நாயன்மார்கள் என அழைக்கப்படும் அறுபத்து மூவருள் முதலாக வைத்து எண்ணப்படும் நால்வருள் ஒருவராவார். இவர் கி.பி. ஏழாம் நூற்றாண்டில், சீர்காழி என்னும் ஊரில், பிராமணக் குடும்பத்திற் பிறந்தார். இவரது தந்தையார் சிவபாதவிருதயர், தாயார் இசைஞானியார். திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் பல சிவத்தலங்களுக்கும் ஒன்றாகவே சென்று பாடல்களால் இறைவனை அர்ச்சித்துள்ளனர். திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருமறைக்காடு (வேதாரண்யம்) என்கிற திருத்தலத்தில் இருந்தபோது மதுரையில் அரசாண்ட பாண்டிய மன்னன் சமணமதத்தில் பற்றுக் கொண்டிருந்தான். அவனுடைய மனைவி மங்கையர்க்கரசியோ சைவ மதத்தில் பற்றுக் கொண்டிருந்தார். பாண்டிய நாட்டில் சமண மதம் ஓங்குவதைத் தடுக்கும் பொருட்டு திருஞான சம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளி அங்கே சைவம் தழைக்க உதவ வேண்டும் என்கிற வேண்டுகோளுடன் அவருக்கு அழைப்பு விடுத்தார். அரசியாரின் அழைப்பினை மதுரை ஏவலர்கள் திருமறைக்காடு வந்து திருஞான சம்பந்தரிடம் தெரிவித்தனர். திருஞான சம்பந்தர் மதுரை செல்ல உடன்பட்டு திருநாவுக்கரசரிடம் விடைபெறச் சென்றார். திருநாவுக்கரசர், அந்தக் கணத்தில் கோள்களின் அமைப்பும் அன்றைய நாளும் தீமை பயக்கும் அறிகுறிகள் காட்டுவதாகக் கூறி சம்பந்தரின் பயணத்தை ஒத்திப்போடச் சொன்னார்.

“சிவனடியையே சிந்திக்கும் சிவனடியார்களை நாளும் கோளும் என்ன செய்து விடும்? அவை நன்மையே பயக்கும்” என்று கூறி பத்து பாடல்கள் பாடினார் திருஞான சம்பந்தர். அந்தப் பாடல்களின் தொகுப்பான பதிகமே (பத்து பாடல்களின் தொகுப்புக்குப் பதிகம் என்று பெயர்) கோளறு பதிகம் எனப் பெயர் பெற்றது. (பதிகப்பயனுடன் சேர்த்து மொத்தம் பதினொரு பாடல்கள்)

கிரகங்கள் அவற்றின் பெயர்ச்சிகள் என்கிற பெயரால் பல்வேறு நம்பிக்கைகளில் தம்மை இழக்கும் மக்கள், இந்தப் பதிகத்தைப் படித்தால் கோள்கள் எந்த நேரத்திலும் நன்மையே பயக்கும் என்பது சைவ சமயத்தாருக்கு ஞான சம்பந்தரால் சொல்லப்பட்டிருக்கும் செய்தி. இன்றும் ஏதாவது முக்கிய காரியமாகக் கிளம்பும் போதும், சகுனம் சரியில்லாத போதும், நல்லபடியாக முடிய வேண்டும் என்கிற வேண்டுகோளுடன் இந்தப் பதிகத்தை முழுதாகவோ முதல் பாடலை மட்டுமோ அவசரமாக முணுமுணுத்து விட்டுச் செல்லும் வழக்கம் பலரிடம் உண்டு. ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வெள்ளி கிழமைகளில் கோளறு பதிகத்தினை பாராயணம் செய்து வரவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1*

*"வேய் உறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்*

*மிக நல்ல வீணை தடவி*

*மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்*

*உளமே புகுந்த அதனால்*

*ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி*

*சனி பாம்பிரண்டு முடனே*

*ஆசறு நல்லநல்ல அவை நல்ல நல்ல*

*அடியாரவர்க்கு மிகவே."*

(எம்பெருமான்) மூங்கில் போன்ற தோளினை உடைய உமையவளுக்கு தன் உடம்பினில் பாகம் கொடுத்தவன். ஆலகால விடத்தை உயிர்களைக் காக்கும் பொருட்டு அருந்தி திருக்கழுத்தினில் தாங்கியவன். இனிமையான இசையை எழுப்பும் வீணையை வாசித்துக்கொண்டு (இருக்கும் அவன்) களங்கமில்லாத பிறையையும் கங்கையையும் தன் திருமுடி மேல் அணிந்து கொண்டு, என் உளம் முழுவதும் நிறைந்து காணப்படுவதால் (அதாவது நான் சிவசிந்தையில் இருப்பதால்) சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, மற்றும் பாம்பாகிய ராகு- கேது என்னும் ஒன்பது கோள்களும்

ஒரு குற்றமும் இல்லாதவையாக (என் போன்ற) சிவனடியாருக்கு என்றும் மிக மிக நல்லதையே செய்யும்.

*2*

*"என்பொடு கொம்பொடாமை இவை மார்பிலங்க*

*எருதேறி யேழை யுடனே*

*பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்*

*உளமே புகுந்த அதனால்*

*ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்*

*உடனாய நாள்க ளவைதாம்*

*அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல*

*அடியாரவர்க்கு மிகவே. "*

திருமாலின் வாமன, பன்றி, கூர்ம அவதாரங்களின் ஆணவத்தை அடக்கி அணிந்துநிற்கும், எலும்பு, கொம்பு, ஆமை ஓடு முதலானவை தன் திருமார்பில் விளங்க, உமையவளுடன் எருதின் மேல் ஏறி ,பொன்போலொளிரும் ஊமத்தைமலர்களாலான மாலைதரித்து, தலையில் கங்கையணிந்து என் உள்ளத்தே நிறைந்ததால், ஒன்பதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்மீனாய் வரும் ஆயில்யம் ஒன்பதோடு ஒன்று – பத்தாவது விண்மீனான மகம்

ஒன்பதொடு ஏழு – பதினாறாவது விண்மீனான விசாகம் பதினெட்டாவது விண்மீனான கேட்டை

ஆறாவது விண்மீனான திருவாதிரை முதலான பயணத்திற்கு விலக்கப்பட்ட நாட்கள் எல்லாமும், சிவனடியார் மீது அன்பொடு அவர்க்கு என்றும் நல்லதையே செய்யும்.

*3*

"உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து

உமையோடும் வெள்ளை விடைமேல்

முருகலர் கொன்றைதிங்கள் முடிமேலணிந்தென்

உளமே புகுந்த அதனால்

திருமகள் கலையதூர்தி செயமாது பூமி

திசை தெய்வமான பலவும்

அருநெதி நல்லநல்ல அவை நல்லநல்ல

அடியாரவர்க்கு மிகவே. "

பவளம் போன்ற சிவந்த திருமேனியில் ஒளி பொருந்திய வெண்ணீற்றை அணிந்து, சிவபெருமான் உமையம்மையாரோடு வெள்ளை எருதின்மீது ஏறி வந்து, அழகு பொருந்திய கொன்றையையும் சந்திரனையும் தன் முடிமேல் அணிந்து சிவபெருமான், உமையம்மையாரோடு வெள்ளை எருதின்மீது ஏறி வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், இலக்குமி, கலைகளை வாகனமாகக் கொண்ட கலைமகள், வெற்றித்தெய்வமான துர்க்கை, பூமாது, திசைத் தெய்வங்கள் ஆன பலரும் அரிய செல்வம் போல நன்மை அளிப்பர். அடியவர்களுக்கு மிக நல்லதையே செய்வர்.

*4*

"மதிநுதன் மங்கையோடு வடவா லிருந்து

மறையோது மெங்கள் பரமன்

நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்

உளமே புகுந்த அதனால்

கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்

கொடுநோய்களான பலவும்

அதிகுணம் நல்லநல்ல அவை நல்லநல்ல

அடியாரவர்க்கு மிகவே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறைபோன்ற நெற்றியை உடைய உமையம்மையாரோடு ஆலமரத்தின்கீழ் இருந்து (வடம் – ஆலமரம்) வேதங்களை அருளிய எங்கள் பரமன், கங்கைநதியையும் கொன்றைமாலையையும் முடிமேல் அணிந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், ஆத்திரமுடையதான காலம், அக்கினி, யமன், யமதூதர், கொடிய நோய்கள் எல்லாம் மிக நல்ல குணமுடையன ஆகி நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு மிகவும் நல்லனவே செய்யும்.

5

"நஞ்சணி கண்டனெந்தை மடவாள் தனோடும்

விடையேறு நங்கள் பரமன்

துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்தென்

உளமே புகுந்த அதனால்

வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்

மிகையான பூதமவையும்

அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல

அடியாரவர்க்கு மிகவே."

விடத்தைக் கழுத்தில் அணிந்த நீலகண்டனும், என் தந்தையும், உமையம்மையாரோடு இடபத்தின்மேல் ஏறி வரும் நம் பரம்பொருள் ஆகிய சிவபெருமான், அடர்ந்து கறுத்த வன்னிமலரையும், கொன்றை மலரையும் தன் முடிமேல் அணிந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், கொடிய சினத்தை உடைய அசுரர்கள், முழங்குகிற இடி, மின்னல், துன்பந்தரும் பஞ்சபூதங்கள் முதலானவையெல்லாம் (நம்மைக் கண்டு) அஞ்சி நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு மிக நல்லனவே செய்யும்.

6

"வாள்வரி அதளதாடை வரி கோவணத்தர்

மடவாள் தனோடும் உடனாய்

நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்

உளமே புகுந்த அதனால்

கோளரி உழுவையோடு கொலையானை கேழல்

கொடு நாகமோடு கரடி

ஆளரி நல்லநல்ல அவை நல்லநல்ல

அடியாரவர்க்கு மிகவே."

ஒளியும் வரியும் பொருந்திய புலித்தோல் ஆடையும்(வாள் -வரி – அதள் – அது -ஆடை அதள் -புலித்தோல்), வரிந்து கட்டிய கோவணமும் அணியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் அன்றலர்ந்த மலர்கள், வன்னி இலை, கொன்றைப்பூ, கங்கை நதி ஆகியவற்றைத் தன் முடிமேல் சூடி, உமையம்மையாரோடும் வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், கொல்லும் வலிய புலி(கோளரி உழுவை), கொலையானை, பன்றி(கேழல்), கொடிய பாம்பு, கரடி, சிங்கம்ஆகியன நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு மிக நல்லனவே செய்யும்.

7

"செப்பிள முலைநன்மங்கை ஒருபாகமாக

விடையேறு செல்வ னடைவார்

ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்

உளமே புகுந்த அதனால்

வெப்பொடு குளிரும் வாத மிகையானபழ பித்தும்

வினையான வந்து நலியா

அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல

அடியாரவர்க்கு மிகவே."

செம்பு போன்ற இளந்தனங்களை உடைய உமையவளைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு, இடபத்தின்மேல் ஏறிவரும் செல்வனாகிய சிவபெருமான் தன்னை அடைந்த அழகிய பிறைச்சந்திரனையும், கங்கையையும் தன் முடிமேல் அணிந்தவனாய், என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், காய்ச்சல்(சுரம்), குளிர்காய்ச்சல், வாதம், மிகுந்த பித்தம் , அவற்றால் வருவன முதலான துன்பங்கள் நம்மை வந்து அடையா. அப்படி அவை நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு அவை நல்லனவே செய்யும்.

8

"வேள்பட விழிசெய்தென்று விடைமேலிருந்து

மடவாள் தனோடும் உடனாய்

வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்

உளமே புகுந்த வதனால்

ஏழ்கடல் சூழிலங்கை அரையன் றனோடும்

இடரான வந்து நலியா

ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல

அடியாரவர்க்கு மிகவே."

அன்று மன்மதன் அழியும்படி நெற்றிக்கண்ணைத் திறந்து எரித்த சிவபெருமான், இடபத்தின்மேல் உமையம்மையாரோடு உடனாய் இருந்து, தன் முடிமேல் ஒளி பொருந்திய பிறைச்சந்திரன், வன்னி இலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்றை மலர் ஆகியனவற்றைச் சூடி வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், ஏழ் கடல்களால் சூழப்பட்ட இலங்கையின் மன்னன் ஆன இராவணன் (பிறன்மனை நாடியதாலேற்பட்டது) போன்ற இடர்களும் வந்து நம்மைத் துன்புறுத்தா. ஆழமான கடலும் நமக்கு நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு அவை நல்லனவே செய்யும்.

*9*

"பலபல வேடமாகும் பரனாரி பாகன்

பசுவேறும் எங்கள் பரமன்

சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்

உளமே புகுந்த அதனால்

மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்

வருகால மான பலவும்

அலைகடல் மேருநல்ல அவை நல்லநல்ல

அடியாரவர்க்கு மிகவே."

பல்வேறு கோலங்கள் கொள்கிற பரம்பொருள் ஆகிறவனும், மாதொருபாகனும், எருதின்மேல் ஏறிவரும் எங்கள் பரமனுமாகிய சிவபெருமான், தன் முடிமேல் கங்கை, எருக்கமலர் ஆகியவற்றை அணிந்து வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், தாமரைமலர்மேல் உறையும் பிரமன், திருமால், வேதங்கள், தேவர்கள் ஆகியோரும், எதிர்காலம், அலையுடைய கடல், மேருமுதலான மலைகள் ஆகியவையும் நமக்கு நல்லனவே செய்வர். அடியவர்களுக்கு அவை மிகவும் நல்லனவே செய்யும்.

*10*

"கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு

குணமாய வேட விகிர்தன்

மத்தமும் மதியும்நாக முடிமேல் அணிந்தென்

உளமே புகுந்த அதனால்

புத்தரொ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்

திருநீறு செம்மை திடமே

அத்தகு நல்லநல்ல அவை நல்லநல்ல

அடியாரமூவர்க்கு மிகவே."

கூந்தலில் மலர்க்கொத்துகள் அணிந்த உமையம்மையாரோடு வேட வடிவில் சென்று அருச்சுனனுக்கு அருள்புரிந்த தன்மை கொண்ட சிவபெருமான், தன் முடிமேல் ஊமத்தை மலர், பிறைச்சந்திரன், பாம்பு ஆகியவற்றை அணிந்து வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால், புத்தர்களையும் சமணர்களையும் ஈசனின் திருநீறு வாதில் தோற்றோடச் செய்யும். அதன் பெருமை நிச்சயமே. எல்லாம் அப்படிச் சிறந்த நல்லனவற்றையே செய்யும். அவை மிகவும் நல்லனவே செய்யும்.

*11*

*"தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி*

*வளர் செம்பொன் எங்கும் திகழ*

*நான்முகன் ஆதியாய பிரமா புரத்து*

*மறைஞான ஞான முனிவன்*

*தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து*

*நலியாத வண்ணம் உரைசெய்*

*ஆன சொல்மாலை யோதும் அடியார்கள் வானில்*

*அரசாள்வர் ஆணை நமதே."*

தேன் நிறைந்த பூங்காக்களைக் கொண்டதும், கரும்பும்(ஆலை), விளைகிற செந்நெல்லும் நிறைந்துள்ளதும், பொன் போல் ஒளிர்வதும், நான்முகன் (வழிபட்ட) காரணத்தால் பிரமாபுரம் என்ற ஊரில் தோன்றி அபரஞானம் பரஞானம் ஆகிய இரு வகை ஞானங்களையும் உணர்ந்த ஞானசம்பந்தனாகிய யான், தாமே வந்து சம்பவிக்கும் நவக்கிரகங்கள், நாள் நட்சத்திரம், போன்றன எல்லாம் அடியவரை வந்து வருத்தாதவாறு பாடிய இப்பதிகத்தை ஓதும் அடியவர்கள் வானுலகில் அரசு புரிவர். இது நமது ஆணை.

## அம்மா

* அம்மா என்பது உடம்பல்ல. அம்மா என்பது இந்த உலகத்தை அரவணைத்துக்கொண்டிருக்கிற ஒரு உணர்ச்சி.
* அம்மா என்பது உலகிலுள்ள எல்லாப் பெண்களிடமும் இருக்கின்ற ஒரு சக்தி.
* அம்மா என்பது மழை பொழியக் காத்திருக்கும் ஒரு குளிர் மேகம்.
* அம்மா என்பது உலகைக் குளிர்வித்துக்கொண்டிருக்கும் தாவர சக்தி.

அம்மா என்பது உலகிலுள்ள அத்தனை உயிர்களையும் தாங்கிக் கொண்டிருக்கும் பூமியின் பலம்.

பெற்ற தாயை வணங்குவோம்!
இருந்தாலும் வணங்குவோம் !
இறந்தாலும் வணங்குவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராஜப் பத்து.

1. மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ
மறைநான்கின் அடிமுடியும் நீ
மதியும் நீ ரவியும் நீ புனலும் நீ அனலும் நீ
மண்டலமிரண்டேழு நீ
பெண்ணும் நீ ஆணும் நீ பல்லுயிர்க்குயிரும் நீ
பிறவும் நீ யொருவ நீயே
பேதாதிபேதம் நீ பாதாதி கேசம் நீ
பெற்றதாய் தந்தை நீயே
பொன்னும் நீ பொருளும் நீ இருளும் நீ ஒளியும் நீ
போதிக்க வந்த குரு நீ
புகழொணா கிரகங்கள் ஒன்பதும் நீ
யிந்த புவனங்கள் பெற்றவனும் நீ
எண்ணரிய ஜீவகோடிகளை ஈன்ற அப்பனே
என் குறைகள் யார்க்குரைப்பேன்?
ஈசனே சிவகாமி நேசனே!
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே !

2. மானாட மழுவாட மதியாட புனலாட
மங்கை சிவகாமி யாட
மாலாட நூலாட மறையாட திறையாட
மறைதந்த பிரமனாட
கோனாட வானிலகு கூட்டமெல்லாமாட
குஞ்சர முகத்தனாட
குண்டல மிரண்டாட தண்டை புலி யுடையாட
குழந்தை முருகேசனாட
ஞானசம்பந்தரோடு இந்திராதி பதினெட்டு முனி
அட்ட பாலகருமாட
நரை தும்பை அருகாட நந்தி வாகனமாட
நாட்டியப் பெண்களாட
வினையோட உனைப்பாட எனைநாடி இதுவேளை
விரைந்தோடி ஆடி வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.கடலென்ற புவிமீதில் அலையென்ற உருக்கொண்டு
கனவென்ற வாழ்வை நம்பி
காற்றென்ற மூவாசை மாருதச் சுழலிலே
கட்டுண்டு நித்த நித்தம்
உடலென்ற கும்பிக்கு உணவென்ற இரைதேடி
ஓயாமலிரவு பகலும்
உண்டுண்டுறங்குவதைக் கண்டதே யல்லாது
ஒருபயனுமடைந்திலேனை
தடமென்ற மிடிகரையில் பந்தபாசங்களெனும்
தாவரம் பின்னலிட்டு
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை இவ்வண்ணமாய்
இடையென்று கடைநின்று ஏனென்று கேளாது
இருப்பதுனக்கழகாகுமா?
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

4.பம்புசூனியமல்ல வைப்பல்ல மாரணம்
தம்பனம் வசியமல்ல
பாதாள வஞ்சனம் பரகாயப் பிரவேச
மதுவல்ல சாலமல்ல
அம்புகுண்டுகள் விலக மொழியு மந்திரமல்ல
ஆகாய குளிகையல்ல
அன்போடு செய்கின்ற வாதமோடிகளல்ல
அறியமோகனமுமல்ல
கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி
கொங்கணர் புலிப்பாணியும்
கோரக்கர் வள்ளுவர் போகமுனியிவரெலாம்
கூறிடும் வயித்தியமுமல்ல
என்மனது உன்னடிவிட்டு நீங்காது நிலைநிற்க
ஏது புகல வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.நொந்துவந்தே னென்று ஆயிரம் சொல்லியும்
நின்செவியில் மந்தமுண்டோ!
நுட்பநெறியறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தையுண்டோ!
சந்ததமும் தஞ்சமென்றடியைப் பிடித்தபின்
தளராத நெஞ்சமுண்டோ!
தந்திமுகன் அறுமுகன் இருபிள்ளையில்லையோ
தந்தை நீ மலடுதானோ!
விந்தையும் ஜாலமும் உன்னிடமிருக்குதே
வினையொன்றும் அறிகிலேனே
வேதமும் சாஸ்த்ரமும் உன்னையே புகழுதே
வேடிக்கை இதுவல்லவோ
இந்தவுலகு ஈரேழும் ஏனளித்தாய் சொல்லு
இனியுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

6.வழிகண்டு உன்னடியைத் துதியாத போதிலும்
வாஞ்சையில்லாத போதிலும்
வாலாயமாய்க் கோயில் சுற்றாத போதிலும்
வஞ்சமே செய்தபோதிலும்
மொழியென்ன மொகனையில்லாமலே பாடினும்
மூர்க்கனே முகடாகினும்
மோசமே செய்யினும் தேசமே தவறினும்
முழு காமியே ஆயினும்
பழி எனக்கல்லவே தாய்தந்தைக்கல்லவோ
பார்த்தவர்கள் சொல்லுவார்கள்
பாரறிய மனைவிக்குப் பாதியுடலீந்த நீ
பாலன் எனைக் காக்கொணாதோ
எழில் பெரிய அண்டங்கள் அடுக்காய் அமைத்த நீ
என் குறைகள் தீர்த்தல் பெரிதோ
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.அன்னைதந்தையர் என்னை ஈன்றதற்கழுவனோ
அறிவிலாததற்கழுவனோ
அல்லாமல் நான்முகன் தன்னையே நோவனோ
ஆசை மூன்றுக்கழுவனோ
முற்பிறப்பென்வினை செய்தேனென்றழுவனோ
என் மூட உறவுக்கழுவனோ
முற்பிறப்பின் வினைவந்து மூளுமென்றழுவனோ
முத்தி வருமென்றுணர்வனோ
தன்னைநொந்தழுவனோ உன்னை நொந்தழுவனோ
தவமென்ன எனுறழுவனோ
தையலார்க்கழுவனோ மெய்தனக்கழுவனோ
தரித்திர தசைக்கழுவனோ
இன்னமென்னப் பிறவிவருமோ வென்றழுவனோ
எல்லாமுரைக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

8.காயாமுன் மரமீது பூபிஞ் சறுத்தனோ
கன்னியர்கள் பழிகொண்டனோ
கடனென்று பொருள்பறித்தே வயிறெரித்தனோ
கிளைவழியில் முள்ளிட்டனோ
தாயாருடன் பிறவிக்கென்னவினை செய்தனோ
தந்தபொருளிலை யென்றனோ
தானென்று கெர்வித்து கொலைகளவு செய்தனோ
தவசிகளை ஏசினேனோ
வாயாரப் பொய்சொல்லி வீண்பொருள் பறித்தனோ
வாணவரைப் பழித்திட்டனோ
வடவுபோலே பிறரைச் சேர்க்கா தடித்தனோ
வந்தபின் என் செய்தனோ
ஈயாத லோபி என்றே பெயரெடுத்தனோ
எல்லாமும் பொறுத்தருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.தாயாரிருந்தென்ன தந்தையுமிருந்தென்ன
தன்பிறவியுறவு கோடி
தனமலை குவித்தென்ன கனபெயரெடுத்தென்ன
தாரணியையாண்டுமென்ன
சேயர்கள் இருந்தென்ன குருவாய இருந்தென்ன
சீடர்கள் இருந்துமென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்ன பயன் எமனோலை
ஒன்றை கண்டு தடுக்க
உதவுமோ இதுவெல்லாம் சந்தையுறவு என்று தான்
உந்தனிருபாதம் பிடித்தேன்
யார்மீது உன்மனமிருந்தாலுமுன் கடைக்
கண்பார்வையது போதுமே
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!

10.இன்னமும் சொல்லவோ உன்மனம் கல்லோ
இரும்போ பெரும்பாறையோ
இருசெவியும் மந்தமோ கேளாத அந்தமோ
இது உனக்கழகு தானோ
என்னென்ன மோகமோ இதுஎன்ன கோபமோ
இதுவோ உன்செய்கை தானோ
இருபிள்ளைதாபமோ யார்மீது கோபமோ
ஆனாலும் நான் விடுவனோ
உன்னை விட்டெங்கெங்கு சென்றாலும் விழலாவனே நான்
உனையடுத்துங் கெடுவனோ
ஓஹோவிது உன்குற்றம் என்குற்றம் என்றும் இல்லை
உற்றுபார் மாபெற்ற ஐயா
என் குற்றமாயினும் உன் குற்றமாயினும்
இனியருள் அளிக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. சனி, ரகு, கேது, புதன், சுக்ரன், செவ்வாய்,
குரு, சந்திரன் சூர்யன் இவரை,
சற்று எனகுள்ளக்கி, ராசி பனிரண்டையும்,
சமமாய் நிறுத்தியுடனே,
பணியோத நக்ஷத்ரங்கள் இருபத்தி எழும்
பக்குவ படுத்தி பின்னால்,
பகர்கின்ற கிரணங்கள் பதினொன்றையும்
வெட்டி பலரையும் அதட்டி என் முன்,
கனி போலவே பேசி கேடு நினைவு
நினைக்கின்ற கசடர்களையும் கசக்கி,
கத நின் தொண்டராம் தொண்டர்க்கு
தொண்டர்கள் தொழுத நாகி,
இனியவள மருவு சிறு வனவை முனி
சாமி எனை ஆள்வதினி யுன் கடன் காண்.

**சத்தியம்**

மனமும் வாக்கும் ஒன்றாக அமைவது சத்தியம். சத்தியமே சொல்லிச் சொல்லிப் பழக்கம் செய்து விட்டால் மனம் சத்தியத்தையே நினைக்கும். வாக்கும் சத்தியத்தையே சொல்லும். அப்போது சொல்பவை எல்லாம் சத்தியமாகவே இருக்கும். தவறி ஒன்றைச் சொல்லும் அந்தச் சொல் சத்தியமாகவே முடியும். உள்ளதையே உள்ளத்தில் நினைப்பதையே சொல்லும். வாக்கு அப்படியே பலிக்கும். தவறிச் சொன்னாலும் அது நடந்து விடும். வார்த்தை சித்தியாவது சத்தியத்தினாலேதான்.

**தாயை வணங்குவதால் கிடைக்கும் புண்ணியம் யாது?**

ஆறு தரம் பூமியை வலம் வருதலும்
ஆயிரம் தடவை காசியில் குளித்தலும்,
நூறு தடவை சேது ஸ்நானம் செய்தலும்
ஆகிய இவற்றால் கிடைக்கும் புண்ணியம்
தாயைப் பக்தி பூர்வமாக ஒரு தரம்
வணங்கினால் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனை

## எங்கள் குருநாதன்

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள்குரு நாதன்
அன்னைபிதாக் குருவானா னெங்கள்குரு நாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குரு நாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
மூவருக்கு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
நன்மைதீமை யறியாதா னெங்கள்குரு நாதன்
நான்தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன் 1

தேகம்நீ யல்லவென்றா னெங்கள்குரு நாதன்
சித்தத்திற் றிகழுகின்றா னெங்கள்குரு நாதன்
மோகத்தை முனியென்றா னெங்கள்குரு நாதன்
முத்திக்கு வித்தென்றா னெங்கள்குரு நாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள்குரு நாதன்
விண்ணும் மண்ணு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன் 2

வாசியோகந் தேரென்றா னெங்கள்குரு நாதன்
வகாரநிலை அறியென்றா னெங்கள்குரு நாதன்
காசிதேசம் போவென்றா னெங்கள்குரு நாதன்
கங்குல்பக லில்லையென்றா னெங்கள்குரு நாதன்
நாசிநுனி நோக்கென்றா னெங்கள்குரு நாதன்
நடனந்தெ ரியுமென்றா னெங்கள்குரு நாதன்
மாசிலோசை கேட்குமென்றா னெங்கள்குரு நாதன்
மற்றுப்பற்றை நீக்கென்றா னெங்கள்குரு நாதன் 3

இருவழியை அடையென்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம் விளங்குமென்றா னெங்கள்குரு நாதன்
கருவழியைக் கடவென்றா னெங்கள்குரு நாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்படும் மனமென்றா னெங்கள்குரு நாதன்
ஒருவருமறியாரென்றா னெங்கள்குரு நாதன்
ஓங்கார வழியென்றா னெங்கள்குரு நாதன்
நிருமலனா யிருவென்றா னெங்கள்குரு நாதன்
நீயேநா னென்றுசொன்னா னெங்கள்குரு நாதன் 4

திக்குத் திகாந்தமெல்லா மெங்கள்குரு நாதன்
சித்தத்துள் நிற்கவைத்தா னெங்கள்குரு நாதன்
பக்குவமாய்ப் பேணென்றா னெங்கள்குரு நாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்றா னெங்கள்குரு நாதன்
அக்குமணி யணியென்றா னெங்கள்குரு நாதன்
அஞ்செழுத்தை ஓதென்றா னெங்கள்குரு நாதன்
நெக்குநெக் குருகென்றா னெங்கள்குரு நாதன்
நித்தியன்நீ யென்றுசொன்னா னெங்கள்குரு நாதன் 5

தேடாமல் தேடென்றா னெங்கள்குரு நாதன்
சீவன் சிவனென்றா னெங்கள்குரு நாதன்
நாடாமல் நாடென்றா னெங்கள்குரு நாதன்
நல்லவழி தோன்றுமென்றா னெங்கள்குரு நாதன்
பாடாமற் பாடென்றா னெங்கள்குரு நாதன்
பத்தரினஞ் சேரென்றா னெங்கள்குரு நாதன்
வாடாமல் வழிபடென்றா னெங்கள்குரு நாதன்
வையகத்தில் வாழென்றா னெங்கள்குரு நாதன் 6

தித்திக்கு மொருமொழியா லெங்கள்குரு நாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்
எத்திக்கு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குரு நாதன்
விண்ணவரு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
தத்துவா தீதனானா னெங்கள்குரு நாதன்
சகலசம் பத்துந்தந்தா னெங்கள்குரு நாதன் 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியந்த மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சோதிமய மென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்
சிட்டிறந்து நில்லென்றா னெங்கள்குரு நாதன்
சாதி சமயமில்லா னெங்கள்குரு நாதன்
தானாய் விளங்குமென்றா னெங்கள்குரு நாதன்
வாதியருங் காணவொண்ணா னெங்கள்குரு நாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தா னெங்கள்குரு நாதன் 8

முச்சந்திக் குப்பையிலே எங்கள்குரு நாதன்
முடக்கிக் கிடந்திடென்றா னெங்கள்குரு நாதன்
அச்சமொடு கோபமில்லா னெங்கள்குரு நாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
பச்சைப் புரவியிலே எங்கள்குரு நாதன்
பாங்காக ஏறென்றா னெங்கள்குரு நாதன்
தச்சன்கட்டா வீட்டிலே எங்கள்குரு நாதன்
தாவுபரி கட்டென்றா னெங்கள்குரு நாதன் 9

நாமேநா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
நமக்குக்குறை வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
போமேபோம் வினையென்றா னெங்கள்குரு நாதன்
போக்குவர வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சங்கற்ப மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
ஓமென் றுறுதிதந்தா னெங்கள்குரு நாதன்
ஊமையெழுத் தறியென்றா னெங்கள்குரு நாதன் 10

*மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு இரக்கப்படுவது*
*மனித குணம் ஆகும்.*
*மற்றவர்கள் படும் துன்பத்தை நீக்குவது*
*தெய்வ குணம் ஆகும்.*

*- ஷோரெ மான்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அம்மை பதிகம்



கலையாத கல்வியும் குறையாத வயதும், ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும், குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும், அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும்
தடைகள் வாரத கொடையும்
தொலையாத நிதியமும், கோணாத கோலும் ஒரு
துன்பம் இல்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரோடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே.

# அபிராமி அந்தாதி

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம்எலாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவி அடங்கக்
காத்தாளை அங்குச பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்(கு) ஒரு தீங்கில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி துணை

ஓம்சக்தி

# கௌரிக்காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற் கா

## வேண்டுதற் கூற்று

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்னும் இருந்தே என்னைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே

அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி சாசுரனைக்கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல் லோபதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாகக் காட்டுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் கட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடுசெழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் கலைமகளே வாழுமம்மா

செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தலைவியரே எல்லாமிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பால்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமாக தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கு காப்பவளே
என்தாயே வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்த்திடுவோம் ஏந்திழையே தாயாரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞடனம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுத்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம்மிகவிட்டு எனன்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதினில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலை பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் கொழுஞ்சுட காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொரு நாள்வரையில் இசைவோடு விரதமிரு
சுன்தி மனதுடனே பரவியணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
இச்சகத்தி லுள்ளோர் எல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முஜறயாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவிட
ஞடனம் கிளர்ந்து வர நல்லருளைச் செய்திடுவாய்
தெவிட்டாத தீங்கனியே தேவிபராசக்தியம்மா
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருள்வாய்

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிசங்கராச்சாரியார் தமது சீடர்களுடன் பாடி பாடல்களே பஜகோவிந்தம்

பாரத நாட்டின் கேரளா மாநிலத்தில் உள்ள காலடி எனப்படும் கிராமத்தில் சங்கரர் அவதரித்தார். இளம் வயதினிலேயே காயத்திரி மந்திரம் உபதேசிக்கப் பெற்றார். காயத்திரி மந்திரத்தையும் அதன் விளக்கத்தையும் நன்கு உபதேசிக்கப் பெற்றிருந்த அவர் 14 ஆம் வயதினை அடைந்த போது வேதங்கள் அனைத்தையும் ஓதியறிந்தவரனார். உலகம் முழுவதும் ஆன்மீகத்தைப் பரப்ப ஒரு உறுதியான சங்கற்பம் செய்து கொண்டார். தம் நேரத்தையும் தம் உடற்சக்தி அனைத்தையும் பாரத கலாச்சாரத்தின் புனிதத் தன்மையைப் பாரத நாடு முழுவதும் பரப்புவதிலேயே பயன்படுத்தினார். காசி நகர வீதிகளில் சீடர்களுடன் சென்று தனது தத்துவங்களை உபதேசிக்கும் புனித காரியத்தைச் செய்து வருவார். அங்குள்ள பல அந்தணர் வீடுகளுக்கு சென்று ஆன்மீக வேதாந்த கருத்துக்களை பரப்பி வந்தார்.

ஒருநாள் ஒரு வயதான அந்தணர் வீட்டுக்கு சென்ற போது சில இலக்கண சூத்திரங்களை உருப்போடுவதில் முனைந்தார். அவ்வமயம் அவருக்குறைவேண்டிய அறிவுரைகள் அனைத்தையும் கூறி அவருக்கு இலக்கண சூத்திரங்கள் உதவமாட்டாது என்று எடுத்துரைத்தார். அவருக்கு கூறிய அறிவுரைகளை சுலோகங்களாக எழுத முடிவு செய்தார். ஆதிசங்கராச்சாரியார் தனது சீடர்களுடன் பாடிய சுலோகங்கள் தான் பஜகோவிந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஜகோவிந்தம் - தமிழ் மொழியாக்கம்
## சாயி ஞானசேகரம் ஐயா

கோவிந்தனைத்தேடு கோவிந்தனைத் தேடு
கோவிந்தனைத்தேடு மூடமதியே
அந்திய காலம் வந்த அவ்வேளை
இலக்கண விதிகள் துணைக்கு வராவே – பஜ

பால வயது விளையாட்டில் மாயச்சல்
காளை வயசு யுவதியர் மாய்ச்சல்
விருத்த வயசு கவலையின் மாய்ச்சல்
பரப்பிரம்மத்தில் எவர்க்குண்டு மாய்ச்சல் - பஜ

சஜ்ஜன சங்கத்தில் பற்றுக்கள் நீங்கும்
பற்றுக்கள் நீங்க மோஹம் அகலும்
மோஹம் அகல சாந்தி நிலவும்
சாந்தி நிலவ விடுதலை உறுதியே – பஜ

நான் "நீ" "அவன்" யார்க்கும் விஸ்ணு ஒருவனே
அமைதியின்மையால் சினக்கிறாய் என்னுடன்
சமநோக்குடன் எந்நிலையிலும் வேண்டின்
விஸ்ணுத்வம் நீ விரைவில் அடைவாய் - பஜ

பராணயாமம் ப்ரத்யாகாரம்
நித்யம் அநித்யம் என்பதின் விசாரம்
ஜபசமேத சமாதி அனுஷ்டானம்
செய் அவதானமாய் பேர் அவதானமாய் - பஜ

யார் உன் மனைவி? யார்? உன் புத்திரன்?
இந்தச் சம்சாரம் அதிக விசித்திரம்
எவருடையவன் நீ? எங்கிருந்து வந்தாய்?
இவற்றின் உண்மையை சிந்தி சோதரா – பஜ

இரவும் பகலும் காலையும் மாலையும்
மாரியும் கோடையும் உருண்டு கொண்டோடும்
காலன் உன் ஆயளை விளையாடிக் கழிக்கும்
இருந்தும் விட்டதோ உன் ஆசைப்புயல்கள் - பஜ



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யோகானந்தமோ, போகானந்தமோ – ஒன்று
சேர்ந்த ஆனந்தமோ தனிமையின் இன்பமோ
பரமானந்தம் எவருடைய சித்தத்தோ
அவர்க்கே ஆனந்தம், மெய் ஆனந்தம் - (அவர்க்கே பஜ

பகவத் கீதை சொற்பம் பயின்றவன்
கங்கா ஜலம் ஒரு துளிதான் உண்டவன்
முராரியை ஒரு தரமாகிலும் நினைத்தவன்
அவனுடன் யமனுக்குச் சர்ச்சை இல்லையே – பஜ

தாமரை இதழில் நீர்த்துளி நிலையா(து)
இந்த வாழ்வும் என்றும் நிலைக்கா(து)
நோய் அகங்காரம் மூடியதிவ்வுடல்
அறிநீ லோகம் சோகமயமே – பஜ

சத்துரு மித்திரன், புத்திரன் இனசனம்
நண்பண் பகைவன் இப்புத்தியை மாற்று
பேதம் காண்பதை எதிலும் விட்டிடு
என்றும் உன் ஆத்மாவை எதிலும் காண்பாய் - பஜ

செல்வம் ஒர்கேடு சிந்தித்தறி நீ
சொஞ்சச் சுகமும் இல்லை இது நிசம்
புத்திரராலும் செல்வர்க்குப் பீதியே
எங்கு நோக்கிலும் இதையே காண்பாய் - பஜ

மறுபடி ஜனனம் மறுபடி மரணம்
மறுபடி ஜனிக்கத்தாய் வயிற்றில் சயனம்
இந்தச் சம்சாரம் தொலைவது கஸ்டம்
கருணைக்கடே காத்தருள் வீரே – பஜ

காமம், க்ரோதம், லோபம், மோஹம்,
இவைகளை அகற்று சிவோஹத்தில் நிலைப்பாடு
ஆத்ம ஞானம் கிடையா மூடா
நரகத்தில் தள்ளுவார், கட்டி வைப்பார் - பஜ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாடுவது கீதை, ஸஹஸ்ரநாமம்*
*நினைப்பது என்றும் ஸ்ரீபதி ரூபம்*
*நிலைப்பது சத்சங்கத்தில் சித்தம்*
*கொடுப்பது தீன ஜனர்க்குச் செல்வம் - பஜ*

*குருசரணமலர் சேர் பெரும் பக்தா*
*ஸம்ஸாரத்தில் நின்று வீடு பெறும் முக்தா*
*இந்திரியம் மனவை இங்ஙனம் அடக்கி (உன்)*
*இதயத்தில் உறையும் மெய்ப்பொருளை*
*(அடைவாய் பஜ)*

# மரணம்

**இதுதான்**

**என் இறுதி நாள்**

**என்று தெரிந்தால்**

**நிச்சயம் நான்**

**என் தோட்டத்தில்**

**வேலை செய்து கழிப்பேன்.**

**என் சிறு செடிகளுக்காக**

**பள்ளம் தோண்டுவேன்**

**அவற்றை சந்தோஷப்படுத்த முயல்வேன்.**

**நான் இறந்த பிறகும்**

**அவை வாழ வேண்டும் என்பதற்காக.**

**- ஆன் ஹிகின்சன் ஸ்பைஸர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சுவடுகள்

## அமரர் திருமதி. சந்திரமதி அமிர்தசிங்கம்

ஈழத்திருநாட்டின் பெருமை மிகு யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்பால் அமைந்துள்ள செந்தமிழும் சிவநெறியும் சீர்பெற்று விளங்குவதற்கு ஆதாரமாக நாற்புறமும் கோவில்களும் கல்விச்சாலைகளும் சூழ்ந்த நகரம் சாவகச்சேரி நுணாவில் கிழக்கை பிறப்பிடமாகக் கொண்ட இவர் சதாசிவம் அன்னம்மா தம்பதிகளின் அன்புக் குழந்தைகள் நான்கு பேரில் இரண்டாவது புத்திரியாக 1941 ம் ஆண்டு சித்திரை மாதம் இருபத்தியெட்டாம் (28) நாள் இவ்வுலகில் அவதரித்தார். இவர் மேல் அன்பு பொழியும் அண்ணாவாக விவேகானந்தனும் அன்புத் தம்பியாக சிவானந்தனும் பாசமிகு தங்கையாக சறோஜினிதேவியும் விளங்கினர். குடும்பத்தவரின் அளவிலா அன்பிற்கும் பாசத்திற்கும் ஆளானவராக சிறு வயதிலே தெய்வ பக்தியும் பெறுப்புணர்வும் கொண்டவராகத் திகழ்ந்தார். இவர் ஆரம்பக் கல்வியை சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாசாலையிலும் உயர் கல்வியை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் பயின்றார்.

இளம் வயதிலேயே துடிப்பும் புத்திக் கூர்மையும் மிக்கவராகக் விளங்கிய இவர் உற்றார் உறவினர் அயலவர் விரும்பும் வகையில் இனிய சுபாவமும் அன்பும் கொண்டு விளங்கினார். இவரது அன்பு அண்ணன் மகள் சாமினியை தனது அரவணைப்பில் அன்பூட்டி அமுதூட்டி செல்லமாக வளர்த்து பாடசாலை கடமைகளையும் செவ்வனே செய்து வைத்தார்.

இவ்வாறு வளர்ந்து மணப்பருவம் எய்திய காலத்தில் யாழ்ப்பாணம் மண்டைதீவைச் சேர்ந்த இராமலிங்கம் மங்களம் தம்பதிகளின் செல்வப் புதல்வன் அமிர்தசிங்கம் என்பவருக்கு திருமணம் செய்ய சாவகச்சேரி அமிர்தபாக்ஷினி சமேத வாரிவனநாதப் பெருமான் துணை கொண்டு பெரியோர்கள் நிச்சயித்தனர். மணவிழாவும் இனிதாய் நடைபெற்றது.

இல்லறவாழ்வில் நல்லறப் பொறுப்புக்களை செவ்வனே செய்து நிறைவேற்றி இனிதே இல்லறம் நடாத்தி வந்தார். ஒத்த குணமும் ஒத்த நலனும் காரணமாக இல்லறம் நல்லறமாக மிளிர்ந்து மனோராஜ் எனும் புதல்வனுக்கு அன்புத் தாயானார். அன்பு மகனுக்கு அமுதொடு அன்னு பண்பு நல்லொழுக்கங்களை ஊட்டி வளர்த்து கல்வியூட்டி மருத்துவத் தொழில் கற்பித்து மருத்துவராக்கினார். மேலும் "ஈன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்" எனும் திருக்குறளிற்கு ஏற்ப பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தனது மகனின் பட்ட மேற்படிப்பு பட்டமளிப்பு விழாவையும் கண்டு களித்து மகிழ்ந்திருந்தார்.

இவ்வாறு இல்லற வாழ்வின் அணி செய்யும் செல்வங்களுடன் அண்ணன் மகள் சாமினி மூலம் இரண்டு பேரப்பிள்ளைகளையும் பெற்று பூரித்திருந்தார். அத்துடன் தனது சகோதர சகோதரியின் நலனிலும் அக்கறை கொண்டு இறுதி வரை அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து திருப்தி அடைந்தார். மைத்துணிகளான சர்வாம்பிகைதேவி, அமரர் நேசமணி சிவஞானசுந்தரம் என்பவர்களின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாக விளங்கிய இவர் மருமக்களான சிவசேகரம், ஞானசேகரம் மற்றும் சிவராகினி என்பவர்களின் நலனிலும் அக்கறை கொண்டு செய்ய வேண்டிய கடமைகளையும் செவ்வனே செய்தார். பின்னைய நாட்களில் தனது பிறந்த இடமான சாவகச்சேரிக்கு செல்ல விருப்பமும் கொண்டிருந்தார்.

முதுமை காரணமாக திடீர் சுகயீனமுற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற போதும் கூட தனது சகிப்புத்தன்மையாலும் சிரிப்பாலும் குடும்பத்தினரை மட்டுமல்லாது வைத்தியசாலை உத்தியோகத்தர்களையும் மகிழவைத்தார். இருப்பினும் யாவரும் எதிர்பார வண்ணம் 2020 ம் ஆண்டு தை மாதம் 14ம் திகதி (14.01.2020) செவ்வாய்க்கிழமை இரவு 7.45 மணியளவில் யாழ் கொக்குவில் மேற்கில் அமைந்துள்ள தனது அண்ணனின் இல்லத்தில், மகன் வேலை காரணமாக திருநெல்வேலி செல்ல விடை கொடுத்துவிட்டு மண்ணுலகம் விட்டு இறைவனுடன் பரமபதம் அடைந்தார்.

**அயலவர்களோடு நட்பு**

அயலவர் நட்பு அவசியம் பாப்பா
ஆபத்தில் உதவுவதும் அயலவர் தான் பாப்பா
கூடி விளையாடிடவும் நண்பர் உண்டு பாப்பா
உறவினர் வருமுன் உதவுவதும் அவர்கள் தான்.

அயலவர் வீட்டு நட்பை மதித்திடு பாப்பா
அவர்களோடு மனநோக நடந்திடல் கூடாது பாப்பா
அயலவர் வீட்டு நட்பை பக்கச் சார்பு அற்றதாய்
அன்பாயும் இரக்கமாயும் தொடர்ந்திடு பாப்பா

- கவிஞர் எம்.வை.எம்.மீஆத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம் ஜெய மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம் ஜெய மங்களம்

அத்துவித வஸ்துவுக்கு மங்களம் ஜெய மங்களம்

ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம் ஜெய மங்களம்

உத்தம பத்தருக்கு மங்களம் ஜெய மங்களம்

முப்பொழுதுந் தொழுவார்க்கு மங்களம் ஜெய மங்களம்

மூவாசை வென்றவர்க்கு மங்களம் ஜெய மங்களம்

முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்

முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம் ஜெய மங்களம்

தன்னைத்தன்னா லறிந்தவர்க்கும் மங்களம் ஜெய மங்களம்

ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம் ஜெய மங்களம்

ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம் ஜெய மங்களம்

ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்

சீர்காழித் தேவருக்கு மங்களம் ஜெய மங்களம்

திருநாவுக் கரசருக்கு மங்களம் ஜெய மங்களம்

சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம் ஜெய மங்களம்

திவ்விய மாணிக்கர்க்கு மங்களம் ஜெய மங்களம்

எங்குந்தங்கும் உயிர்களுக்கு மங்களம் ஜெய மங்களம்

**சீர்டி பாபா காயத்திரி**

ஓம் ஷீர்டி வாசாய வித்மஹே
சச்சிதானந்தாய தீமஹி
தன்னோ சாய் ப்ரசோதயாத்.

**சாயி காயத்திரி**

ஓம் சாயீஸ்வராய வித்மஹே
சத்ய தேவாய தீமஹி
தந்நோ சாயீ ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் எப்படி வாழவேண்டும்

## இதோ ஒரு கதை

தாங்க முடியாத வெய்யிலில் ஒருவன் களைத்தபடி நடந்து கொண்டிருந்தான். சாலையோரத்தில் ஒரு மரம் நின்று கொண்டிருந்தது. அதன் நிழலில் ஒதுங்கி நின்றபோது அங்கே ஏதோ எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தான்.

"அன்பர்களே! வேலிக்கு அருகில் ஓர் அற்புதமான சுனைநீர் இருக்கிறது. தாகமாக இருந்தால் வந்து பருகவும்" என்று எழுதியிருந் தது.

ஓடிச் சென்று தண்ணீரைக் குடித்தபோது வேறொரு வாசகம் எழுதப்பட்டிருந்தது.

"களைப்பாக இருந்தால் அதோ அருகில் இருக்கும் வாங்கில் அமர்ந்து ஓய்வெடுங்கள்"

ஓய்வெடுத்தபோது இன்னொரு வாசகம் தெரிந்தது.

"பசியாக இருந்தால் பக்கத்தில் இருக்கும் பீப்பாவில் அப்பிள்கள் இருக்கின்றன. எடுத்துச் சாப்பிடுங்கள்"

சாப்பிட்டபோது அங்கு ஒரு முதியவர் வந்தார்.

"பாவிக்காவிட்டால் நீர் அசுத்தமடைந்துவிடும். படுக்கா விட்டால் வாங்கில் தூசு பிடித்துவிடும். அதிகமாகக் கொட்டுப் படும் அப்பிள்களை யாராவது சாப்பிடாவிட்டால் காய்த்த அப்பிள் மரத்திற்குப் பெருமையில்லை" என்றார்.

தன் கிணற்றில் குளிக்கவிடாது,
தன் வாங்கில் படுக்கவிடாது,
தனக்குத் தேவையற்ற உணவை
மற்றவர்களுக்குக் கொடுக்க மனமில்லாது,
வாழும் மனிதனாக
புவியில் ஒருவன் காணப்பட்டால்
அவனால் கடவுளும் கண்ணீர் வடிக்கிறார்.
பணத்தையும் உணவையும் பதுக்கிவைத்து
சுயநலத்தோடு வாழ்வது வாழ்வல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள் பல....



**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் வழிகாட்டியாய் பண்பின் உறைவிடமாய் எல்லோர் மனதையும் தன் புன்சிரிப்பால் கவர்ந்து காலமறிந்து பலனை எதிர்பாராது தனது கடமைகளை செவ்வனே செய்து திருப்தியுற்ற நிலையில் எமது அன்புத் தெய்வம் சந்திரமதி அமிர்தசிங்கம் அவர்கள் மண்ணுலகப் பயணம் முடித்து இறைவன் திருப்பாதங்களைச் சங்கித்த போது அச் செய்தி கேட்டு வந்து ஆறுதல் கூறியவர்கள், செய்தி அறிந்தது முதல் இறுதி வரை தமது சிரமத்தினை பொருட்படுத்தாது தேவைப்பட்ட அனைத்து உதவிகளையும் செய்தவர்கள், ஈமக்கிரிகைகளில் நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், தொலைபேசி வழியில் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளின் போது பல்வேறு வழிகளிலும் துணை நின்றவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


## நன்றி

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

கணவன், மகன், மருமக்கள்,
சகோதர சகோதரி மற்றும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்

வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

அன்னை மடியில் 28 04 1941



ஆண்டவன் அணைப்பில் 14 01 2020

# அமரர்

## திருமதி சந்திரமதி அமிர்தசிங்கம்

அவர்களின்

### திதி நிர்ணய வெண்பா

இலங்கிடும் விகாரி தைத்திங்கள் பதின்னான்காம் நாள்
துலங்கிடும் அபரபக்க பஞ்சமி திதிதனில்–புகழ்
விளங்கிடும் அமிர்தசிங்கம் சந்திரமதி–அம்மையார்
திகழ்திடும் இந்திரலோகம்தனில் சந்திரஜோதியானதிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org